செய்தி வெளியீடு எண்.21-2016 நாள்: 10.06.2016

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் மாணவர் சேர்க்கைக்கு மாணவ மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

******

தமிழ்நாடு அரசால் விழுப்புரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட/ மிகப்பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கென 38 விடுதிகளும், மாணவியர்களுக்கென 14 விடுதிகளும், கல்லூரி மாணவர்களுக்கென 6 விடுதிகளும், மாணவியர்களுக்கென 2 விடுதிகளும் என மொத்தம் 60 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

பள்ளி விடுதிகளில் 4 முதல் 12ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர் / மணவியர்களுக்கும், கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக் .டி. . படிப்புகளில் பயிலும் மாணவ / மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். பிவ/மிபிவ/சீம விடுதிகளில் அனைத்து வகுப்பை சார்ந்த மாணவ/மாணவியர்களும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்விடுதிகளில் அனைத்து மாணவ மாணவியருக்கு உணவு, தங்கும் வசதி இலவசமாக அளிக்கப்படும். பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 2 செட் பாலியெஸ்டர் காட்டன் சீருடைகள் வழங்கப்படும். பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும்ஜ ஜீணவ, மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும். மலைப்பிரதேசங்களில் இயங்கும் விடுதிகளில் கம்பளி மேலாடைகள் வழங்கப்படும்.

விடுதிகளில் சேருவதற்கு, பெற்றோர்/ பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீ-க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

தகுதியுடைய மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்/ காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 30.06.2016-க்குள்

சமா்ப்பிக்க வேண்டும். கல்லூரி விடுதிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளா் / காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினா் நல அலுவலகத்தில் 15.07.2016-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். சமா்ப்பிக்க வேண்டும். மாணவ/ மாணவியா்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழா்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியா்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவா் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவா்கள் தெரிவித்துள்ளாா்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், விழுப்புரம்.